www.Padasalai.Net www.Trb Tnpsc.com

வகுப்பு : 7

தேர்வு எண் | | | 7 | 5 | 2 | 0

# மூன்றாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு(SA)-2023-24

## தமிழ்

நேரம் : 2.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 60

I. சரியான விடையைத் தெரிவு செய்க. 14X1=14

1. மாரி + ஒன்று என்பதனைச் சேர்ந்தெழுதக் கிடைக்கும் சொல் ------
அ) மாரியொன்று ஆ) மாரி ஒன்று இ) மாரியின்று ஈ) மாரியன்று

2. வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை -------- செய்வர்.
அ) அறுவடை ஆ) உழவு இ) நடவு ஈ) விற்பனை

3. திருநெல்வேலி --------- மன்னர்களோடு தொடர்பு உடையது.
அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ

4. நானும் என் தோழியும் --------- இணைந்து இருப்போம்.
அ) இஞ்சி தின்ற குரங்குபோல ஆ) நகமும் சதையும் போல
இ) குன்றின் மேலிட்ட விளக்கு போல ஈ) கிணற்றுத் தவளை போல

5. 'இளமை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் -------
அ) முதுமை ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை

6. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை ------- என்று கூறுவர்.
அ) மருந்து ஆ) மருத்துவர் இ) மருத்துவ மனை ஈ) மாத்திரை

7. மக்கள் அனைவரும் -------- ஒத்த இயல்புடையவர்கள்.
அ) பிறப்பால் ஆ) நிறத்தால் இ) குணத்தால் ஈ) பணத்தால்

8. மனித வாழ்க்கையில் தேவைப்படுவதாக இயேசு நாதர் கூறுவது --------
அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ) வீடு

9. 'தானொரு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது --------
அ) தா + ஒரு ஆ) தான் + னொரு இ) தான் + ஒரு ஈ) தானே + ஒரு

10. காயிதே மில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று பேசிய இடம் ---------
அ) சட்டமன்றம் ஆ) நாடாளுமன்றம் இ) ஊராட்சிமன்றம் ஈ) நகர்மன்றம்

11. முதுமை + மொழி என்பதனை சேர்த்தெழுதக்கிடைக்கும் சொல் ------
அ) முதுமொழி ஆ) முதுமைமொழி இ) முதிய மொழி ஈ) முதல் மொழி

12. பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகிவருவது --------
அ) பொருளாகுபெயர் ஆ) சினையாகுபெயர் இ) பண்பாகு பெயர் ஈ) இடவாகு பெயர்

13. அடுக்குத் தொடரில் ஒரே சொல் --------- முறைவரை அடுக்கி வரும்.
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

14. நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும் -------- துன்பப்பட நேரிடும்.
அ) இல்லை யென்றால் ஆ) எனவே இ) ஏனெனில் ஈ) ஆகையால்

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5X2=10

15. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?

16. கொற்கை முத்து பற்றி எழுதுக.

Kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

17. உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

18. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?

19. ஒரு செயலைச்செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?

20. வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?

21. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.

22. இரட்டைக் கிளவி என்பது யாது? சான்று தருக.

III. அடிமாறாமல் எழுதுக. 4+2=6

23. "வாயும் வயிறும்......." எனத் தொடங்கி, "சோலை வனம்!" என முடியும் மலைப்பொழிவு பாடலை எழுதுக.

24. "பிறப்பொக்கும்......." என தொடங்கும் திருக்குறளை எழுதுக.

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 4X3=12

25. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.

26. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

27. உருவக அணியை விளக்குக.

28. குயில்குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வை எழுதுக.

29. ஆட்சிமொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.

30. பொருளாகுபெயரையும் சினையாகுபெயரையும் வேறுபடுத்துக.

V. பின்வரும் அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 6X1=6

31. பொருள் தருக.

அ) தாரணி உலகம் ஆ) மாரி மழை

Aahana.M
Chennai District

32. கலைச் சொல் தருக.

அ) Poet கவிஞர் ஆ) Religion சமயம்

33. உன் பொறுப்புகள் இரண்டினை எழுதுக.

34. ஓர் எழுத்து சொற்களால் நிரப்புக.

அ) ஈ ------- பறக்கும்.

ஆ) பேனாவில் மை ---------- ஊற்ற வேண்டும்.

35. பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.

அ) வளருது வளர்கின்றது ஆ) வாரான் வருகின்றான்

36. கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயரில் இருந்து புதிய சொற்கள் இரண்டினை உருவாக்குக.

செங்கல்பட்டு செங்கல், பட்டு, பகு, பல், கல், கட்டு.

VI. பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 2X6=12

37. அ) "உண்மை ஒளி" படக் கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) "பயணம்" – படக் கதையைச் சுருக்கி எழுதுக.

38. அ) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு நண்பருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு "ஒற்றுமையே உயர்வு" கட்டுரை எழுதுக.

முன்னுரை – புரிந்து கொள்ளுதல் – விட்டுக் கொடுத்தல் – ஒற்றுமையின் உயர்வு – ஒற்றுமையின் விளைவு – முடிவுரை.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com



www.Padasalai.Net